# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20.11.2019 | 1) தூத்துக்குடி முதல் மணியாச்சி வரை புதிய சாலை 2014–15ம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை அமைப்பதற்கு நெடுஞ்சாலைத்துறைக்கு சங்கரப்பேரி கிராமத்தில் நிலங்களை நிலமாற்றம் செய்வதற்கு தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) தூத்துக்குடி – மணியாச்சி புதிய சாலை தூத்துக்குடி அவர்களின் கடித ந.க.எண். அ1/13/2019 நாள் 05.11.2019ல் மாநகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என்பதற்கான தீர்மானம் நிறைவேற்றி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. | | | | 193) அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |
| வ,எண் | புல எண் | வகைபாடு | மொத்த விஸ்தீரணம் | நிலமாற்றம் செய்யப்படும் விஸ்தீரணம் | புதிதாக உத்தேசிக்கப் பட்டுள்ள உட்பிரிவு எண். |
| 1 | 262 | குளம் (செம்புலி வீரப்பன்குளம்) | 0.86.50 | 0.05.50 | 262/2 |
| 2 | 277 | பாட்டை | 1.02.00 | 0.03.62 | 277/2 |
| 3 | 309/2 | பாட்டை | 0.02.50 | 0.01.60 | 309/2 |
| 4 | 313/2 | பாட்டை | 0.01.50 | 0.00.83 | 313/4 |
| | | | மொத்தம் | 0.11.55 | |
| | எனவே மேற்கண்ட நிலங்கள் அரசு புறம்போக்கு நிலம் என்பதால் நெடுஞ்சாலைத்துறைக்கு நிலமாற்றம் செய்திட மாநகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்ற இசைவினை தெரிவித்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். எப்1/3354/2019 | | | | |
| | 2) தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி வட்டம் மீளவிட்டான் பகுதி II கிராமத்தில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் தூத்துக்குடி திருச்செந்தூர்–கன்னியாகுமரி நெடுஞ்சாலை மேம்பாடு செய்யும் பணிகள் கீழ்க்கண்ட மீளவிட்டான் பகுதி II கிராமத்தில் ஒருங்கிணைந்த நிலங்களை நிலமாற்றம் செய்வதற்கு தனி வட்டாட்சியர் (நிலம் எடுப்பு) கிழக்கு கடற்கரை சாலை அலகு 1 தூத்துக்குடி அவர்களின் கடித ந.க.எண். ந,க.கி.க.சா 1/2014 நாள் 18.07.2019ல் மாநகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என்பதற்கான தீர்மானம் நிறைவேற்றி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. | | | | 194)அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |

| வ.எண் | புல எண் | மொத்த விஸ்தீரணம் | நில உரிமைதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | 433 | 0.64.0 | பாதை |
| 2 | 795 | 6.28.0 | ஹார்பர் ரயில்வே |
| 3 | 795/2 | 0.50.0 | பாதை |
| 4 | 795/1 B | 0.59.0 | ஹார்பர் ரயில்வே |
| 5 | 801 | 1.89.0 | ஹார்பர் ரயில்வே |
| 6 | 802 | 1.45.5 | ஹார்பர் ரயில்வே |
| 7 | 819/2 | 0.14.5 | நெடுஞ்சாலை |
| 8 | 820/2 | 0.18.0 | நெடுஞ்சாலை |
| 9 | 821/2 | 0.23.0 | நெடுஞ்சாலை |
| 10 | 859/2 | 0.17.0 | நெடுஞ்சாலை |
| 11 | 918/1 A 1 B | 0.87.5 | சாலை |
| 12 | 918/1 A2 | 019.5 | நெடுஞ்சாலை |
| 13 | 917/1 | 327.00.5 | அளங்காடு |
| 14 | 917/2 | 0.04.0 | நெடுஞ்சாலை |
| 15 | 919/ A 2 | 0.22.0 | சாலை |
| 16 | 919/ B 2 | 0.42.5 | சாலை |
| 17 | 920/1 A 2 | 1.22.0 | சாலை |
| 18 | 921/1 A 3 B | 1.37.5 | சாலை |
| 19 | 1726 | 1.50.5 | நெடுஞ்சாலை |
| 20 | 1727 | 1.90.5 | நெடுஞ்சாலை |
| 21 | 1728 | 1.65.5 | நெடுஞ்சாலை |
| 22 | 1729 | 1.70.0 | நெடுஞ்சாலை |
| 23 | 1730 | 0.69.5 | நெடுஞ்சாலை |
| | எனவே மேற்கண்ட நிலங்கள் அரசு புறம்போக்கு நிலம் என்பதால் நெடுஞ்சாலைத்துறைக்கு நிலமாற்றம் செய்திட மாநகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்ற இசைவினை தெரிவித்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்ற அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.எப்1/3353/2019 | | |
| | **3)** தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பிரையண்ட் நகர், முடுக்குகாடு வேலாயுத நகர் மற்றும் இந்திரா நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை குடிநீர் விநியோக மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் நான்காவது பைப்லைன் திட்டத்தின் கீழ் பகிர்மான குழாய்கள் பதிக்கப்படாமல் விடுபட்டு உள்ளபடியால் மேற்படி பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் உள்ள வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க ஏதுவாக மேற்படி பகுதியில் புதிதாக பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு ரூ. 22.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | | **195)** அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பிரையண்ட் நகர் முடுக்குகாடு வேலாயுத நகர் மற்றும் இந்திரா நகர் மேல் நிலைத் நீர்த்தேக்க தொட்டிகளின் குடிநீர் விநியோக மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் நான்காவது பைப் லைன் திட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் பதிக்கும் பணி | 22.50 |
| | மொத்தம் | 22.50 |
| | எனவே பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. 22.50 (இலட்சத்தில்) குடிநீர் நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சி கட்டண நிதியின் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மாநகராட்சி குடிநீர் நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவின் வரன் முறைப்படுத்துதல் வளர்ச்சி கட்டண நிதி மூலம் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ2/02376/2019 | |
| | 4)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி Providing of damaged ceiling plastering work at New Busstand verandah portion பணிக்காக ரூ. 12,50,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 12.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் வராததால் 09.08.2019 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல்.<br>1) திரு. J.Suresh Jeyakumar மதிப்பீட்டை விட 4.83 % அதிகம் (ரூ.9,37,513.00)<br>2) திரு.T.Murugan மதிப்பீட்டை விட 6.48% அதிகம் (ரூ.9,52,268.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. J.Suresh Jeyakumar மதிப்பீட்டை விட 4.83% அதிகம் (ரூ.9,37,513.00) கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப் புள்ளியிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டதின் ஒப்புநோக்கு பட்டியல்.<br>1) திரு. J.Suresh Jeyakumar மதிப்பீட்டை விட 4.42 % அதிகம் (ரூ.9,33,838.00)<br>2) திரு.T.Murugan மதிப்பீட்டை விட 6.48% அதிகம் (ரூ.9,52,268.00)<br><br>திரு. J.Suresh Jeyakumar என்பவரின் விலை குறைப்பு ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டை விட 4.42 % அதிகம் (ரூ.9,33,838.00) அதிகம் பொறியியல் 3கையேடு பிரிவு II விதி | 196) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அங்ககரிக்கப்பட்டது, |

| | | |
|---|---|---|
| | எண் 272–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத் தொகையினை விட கூடுதலாக 5% வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 4.42% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அங்கீகரிக்கலாம்<br>2) மதிப்பீட்டை விட 4.42% அதிகமாக கொடுத்த திரு. J.Suresh Jeyakumar ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ2/00387/2019 | |
| | 5) தூத்துக்குடி வட்டாட்சியர் அவர்களின் கடித எண். ந.க.எண்.அ1/14498/17 நாள் 20.9.2019ல் தூத்துக்குடி பகுதி 2 கிராமம் – வார்டு 7 பிளாக் எண். 4பி. டவுண் சர்வே எண். 154 அரசு புறம்போக்கு சப் மெஜிஸ்ட்ரேட் கோர்ட் வட்டாட்சியர் அலுவலகம் மொத்த விஸ்தீரணம் 0.2744.5ல் 831 ச.மீ. (20.5 சென்ட் ) நிலத்தில் மத்தியபாகம் காவல் நிலையம் கட்ட நிலத்தை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி வழங்குமாறு கோரப்பட்டது.<br>அதன் பேரில் நேராய்வு செய்யப்பட்டதில் இடம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் கடற்கரையை ஒட்டி CRZ ii ZONE யில் அமைகிறது. மேலும் நில மாற்றம் செய்யப்படவிருக்கிற இடம் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லை என்பதாலும் ஆவணங்களின்படி அரசுபுறம்போக்கு இடம் என்று உள்ளபடியால் நில உபயோகம் மாற்றம் செய்வதற்கு எந்தவித ஆட்சேபணை இல்லை என்பதால் மத்திய பாகம் காவல் நிலையம் கட்ட மாநகராட்சி தரப்பில் ஆட்சேபணை ஏதும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1468/கிம/எப்1 | 197) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 6)தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட மேற்கு மண்டல பகுதியில் உள்ள இராஜாஜி சிறுவர் பூங்கா வாயில் முன்பு வடகிழக்கு பகுதியில் உள்ள 20 X 20 என்ற அளவில் காலியிடத்தில் ஆவின் ஹைடெக் பார்லர் அமைக்க பொது மேலாளர் தூத்துக்குடி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிமிடெட் (வரையறு) கோரியுள்ளார். மேற்படி இடத்தை ஆணையர் மற்றும் தனி அலுவலர் நகரமைப்பு பொறுப்பு அலுவலர் ஆகியோரால் தல ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில் தரை வாடகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. | 198) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| வ.எண் | கடையின் அளவு (ச.அ) | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | 20 X20 | ஆவின் ஹைடெக் பார்லர் | ரூ.6000/– |
| | மேலும் மேற்படி கட்டிடங்களுக்கு நடைமுறையில் உள்ள அரசு வழிகாட்டுதல் நெறிமுறை மற்றும் தற்போதைய சந்தை மதிப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு மாத வாடகை கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட படி வாடகை நிர்ணயம் செய்து. மேற்படி நிறுவனத்திற்கு ரூ. 6000/– மாத வாடகை அடிப்படையிலும் ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டியும் மாநகராட்சியின் ஏதேனும் வளர்ச்சிப் பணிகளுக்கு தேவைப்படின் உடன் திரும்ப வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மேற்படி இடத்தில் ஆவின் ஹைடெக் பார்லர் பயன்பாட்டிற்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம். எப்1/2654/2019 | | |
| | 7) தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட ரோச் பூங்காவினையொட்டி பார்க்கிங் வாயில் முன்புறம் அமைந்துள்ள வாகன நிறுத்துமிடத்தில் ஏற்கனவே அமைந்தள்ள பேருந்து நிறுத்தத்தின் தென்மேல்புறம் அளவில் இட ஒதுக்கீடு செய்ய 20 X 20 என்ற அளவில் காலியிடத்தில் ஆவின் ஹைடெக் பார்லர் அமைக்க பொது மேலாளர் தூத்துக்குடி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிமிடெட் (வரையறு) கோரியுள்ளனர். மேற்படி இடத்தை ஆணையா் மற்றும் தனி அலுவலர் நகரமைப்பு பொறுப்பு அலுவலர் ஆகியோரால் தல ஆய்வு மேற்கொண்டதின் அடிப்படையில் தரை வாடகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. | | |
| வ.எண் | கடையின் அளவு (ச.அ) | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை |
| 1 | 20 X 20 | ஆவின் ஹைடெக் பார்லர் | ரூ.6000/– |
| | மேலும், மேற்படி கட்டிடங்களுக்கு நடைமுறையில் உள்ள அரசு வழிகாட்டுதல் நெறிமுறை மற்றும் தற்போதைய சந்தை மதிப்பு அகியவற்றை கணக்கில் கொண்ட மாத வாடகை கணக்கிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி அட்டவைணையில் தெரிவிக்கப்பட்ட படி வாடகை நிர்ணயம் செய்து மேற்படி நிறுவனத்திற்கு ரூ. 6000/– மாத வாடகை அடிப்படையிலும், ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டியும், மாநகராட்சியின் ஏதேனும் வளர்ச்சிப் பணிகளுக்கு தேவைப்படின் உடன் திரும்ப வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மேற்படி இடத்தில் ஆவின் ஹடெக் பார்லர் பயன்பாட்டிற்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்1/2654/2019 | | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.08.11.2019

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி